**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**
O.S.No.49/2024

வாதி தரப்பு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 06.10.2025ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வா.சா.1– தர்மராஜ் த/பெ ராமசாமி**

**1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கு போட்டுள்ள சொத்து எங்களுக்கு குடும்பச்சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.7 கிரையப்பத்திரத்தில் விற்பனை செய்பவர்கள் செய்துகொண்டதாக சொல்லப்படும் வாய்மொழி பாகப்பிரிவினையில் யாருக்கு எந்த பாகம் பிரிக்கப்பட்டது என்ற தகவல்கள் ஏதும் இல்லை யென்றால் சரிதான். விற்பனை பத்திரத்தில் 7 நபர்கள் விற்கவில்லை 6 நபர்கள் மட்டுமே விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். யார் விற்பனை செய்யவில்லை என்றால் தனலட்சுமி என்பவர் விற்பனை செய்யவில்லை.

2. தனலட்சுமிக்கு தெரியாமல் விற்பனை செய்யப்பட்ட வா.சா.ஆ.7 கிரையப்பத்திரம் செல்லாது என்றால் சரிதான். காசிராஜனுக்கு விற்பனை செய்த பத்திரத்தில் நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு உள்ள பாகத்தை மட்டும் விற்பனை செய்தோம் என்றால் சரிதான் பாகப்பத்திரம் பிரித்தோம். பாகப்பத்திரம் பிரித்தற்கு பாகம் பத்திரம் ஏதுவும் தாக்கல் செய்தோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. பாகம் எதுவும் பிரிக்கவில்லை அதனால் பாகப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. மொத்த சொத்திற்கு எங்களுக்குள்ள ஒரு பாகத்தை மட்டும் கிரையம் செய்தததால் தான் நான்கெல்லை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு என்ன பாகம் ஒதுக்கப்படுமோ அந்த பாகம் தான் காசிராஜனுக்கு உரியது என்றால் சரிதான். ஏற்கனவே பாகம் பிரிந்ததாகவும் தாவா சொத்து எனது தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்ததாகவும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல.

4. வாதிகள் தாவா சொத்தில் சுவாதீன அனுபவத்தில் உள்ளதாகவும் பிரதிவாதிகள் தொந்தரவு செய்வதாகவும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. குடும்பச்சொத்தை பாகம் பிரிவினை செய்யாமல் விற்பனை செய்ததால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.